உ



# சுப்ரமணிய புஜங்கம்

1) இளமைநலம் மாறாமல் எழில் கொண்ட என்னரசே!
எதிர்நோக்கி வருகின்ற இடரனைத்தும் தூளாக்கும்
களங்கமிலா வேழமுகக் கணபதியே! சடைமுடியில்
கங்கையினைத் தரித்தவனைக் களிப்பூட்டும் மூத்தவனே!
உளங்கனிந்தே பிரம்மனும் இந்திராதி தேவர்களும்
ஒருமையுடன் தொழுது மனமுவக்கின்ற தேவநேயா
வளம் பலவும் பெற்றுநான் வாழ்வாங்கு வாழ்தற்கு
வரமனைத்தும் தரும் உனையே வாழ்த்திநான் வணங்குகிறேன்

2) கட்டுரைகள் அறிகில்லேன் கவிதையும் நானறியேன்
கனிவூறும் வார்த்தைகளின் கருப்பொருளும் அறியேன்
இட்டமுடன் மொழி நிரப்பி உரைக்கின்ற இங்கிதமும்
எழிலார்ந்த கருத்தை எடுத்துரைக்கவு மறியேன்யான்
எட்டாத எல்லையாமோர் எழில்நாணப் பேரொளியாய்
என் நெஞ்சில் வந்தமர்ந்து ஆறாறு முகங்களுடன்
கட்டுப்பாடில்லாமல் கரை கடந்த வெள்ளமெனக்
கனிவுடனே உரைசெய்யும் காட்சியினைக் கண்டுவந்தேன்.

3) வண்ணமயில் மீதமர்ந்து வாக்கெல்லாம் நிறைவேற்றி
வடிவழகுத் திருக்கோல எழில்வனப்பு மிக்குடையோன்
எண்ணியே துதிப்போரின் இதயமெனும் பெருங்குகையில்
இருந்தபடி பார்ப்பவர்க்கு இணையிலாத் தெய்வமானான்.
புண்ணிய உயர்வேதப் பொருளாக நின்றபடி
புவியெலாம் காத்தருளும் பெருமானே! ஆலவாய்
அண்ணலாம் சிவனாரின் அன்புறவுப் பாலனாம்
அருள் அழகன் முருகனவன் அடிமலர்கள் தொழுகின்றேன்.

4) பக்தியுடன் தொழுவோரின் பாவங்கள் தமைப்போக்கி
பவக்கடலைத் தாண்டும் பாங்கினையும் உணர்த்துகின்ற
சக்தியுடன் செந்திலெனும் சன்னிதியில் அமர்ந்தோனே!
சபலங்கள் அலைமோதும் சஞ்சலத்தின் வாழ்வினின்றும்
முக்தியினைத் தருமாறு முனைந்துவரம் கேட்போர்க்கு
முழுஇன்பம் தந்தருளும் மூவாத இளமையனே!

சக்தியின் மைந்தனாம் சரவணத்தில் வந்துதித்த
சண்முகநாதனின் சீரடிகள் தொழுகின்றேன்.

5) எண்ணற்ற பேரலைகள் எழுந்தோடி வந்தாலும்
இமைமூடித் திறப்பதற்குள் எழுந்தெங்கோ மறைதல் போல்
திண்ணமுடன் வேலவனை தரிசனம் செய்வோர்க்குத்
தீராத துன்பமெலாம் தீர்ந்தொழியும் என்கின்ற
உண்மையினை விளக்கிடவே ஓயாமல் கடலலைகள்
உலவுகின்ற செந்திலிலே உயர்தனிக் கோயில் கொண்ட
வண்ணமயில் வாகனனை வாழ்த்திடும் நெஞ்சமாம்
வாசமலர்க் குகையினிலே வைத்து வணங்குகின்றேன்

6) என்னையே நினைந்தெனது இருப்பிடம் தனைத்தேடி
எழில் சூழ்ந்த மலைமீது ஏறிவரும் அன்பரெலாம்
அன்னையுடன் சேர்ந்திணைந்து அரனார் தாம் கொலுவிருக்கும்
அழகுமிகு கயிலையினை அடைந்து நற்பலன் பெறுவார்
என்னுமொரு உண்மையினை எடுத்துரைக்கும் வண்ணத்தில்
இனிமை தவழ் கந்தகிரிதனில் ஏறி அமர்ந்திட்ட
அன்பனாம் கந்தவேளின் ஆறுதிரு முகங்களின் நல்
அருள்பொழியும் திருக்காட்சி அவ்வாறே நிலைப்பதாக!

7) கொடியதாம் பாவமென்னும் குறையினைப் போக்கிடவே
குதித்தோடி வரும் அலைகள் சூழும் திருக் கடற்கரையில்
அடியவர்கள் செய்கின்ற அரிதான பிரார்த்தனைக்கு
அருளிடவே மனங்கொண்டு அருங்குந்த கிரியினில்
குடியிருந்து பெருஞ்சோதிக் கொழுந்தாகக் காட்சிதரும்
குகனைக் கரங்குவித்துக் கும்பிட்டுத் தான் பணிந்து
அடியவர்கள் படுகின்ற அல்லலெலாம் நீங்கிடவே
அருள் செய்க எனக்கேட்டு அன்புடனே வேண்டிடுவோம்!

8) கங்குலிருள் நீக்கிடவே கதிர் பரப்பும் ஆயிரமாம்
கதிரவனின் ஒளிக்கதிர் போல் கவின்மிக்க உடலோடும்
எங்கணும் மணக்கின்ற எழில்மலர்கள் பரப்பிவைத்த
ஈடில்லாப் பெருமைமிக்க கன்னியராம் கார்த்திகை
மங்கையர் அறுவரும் மாணிக்கத் தொட்டிலிட்டு
மனங்குளிரத் தாலாட்ட மகிழ்வுடனே கண்ணுறங்கும்
செங்கனிச்சீர் வாயனாம் சீரார்ந்த கார்த்திகேயன்
செழுங்கமலத் திருவடியைச் சிந்திக்கத் துன்பம்போமே!

9) பொன்னெனவே ஒளிர்கின்ற பூந்துகில் ஆடையுமே
ஆர்த்த இடையினிலே பொலிவுற்றுத் திகழ்ந்திலங்கும்
மின்னுகின்ற மணிகளெல்லாம் மெல்லிய இசையொலிக்க
மேகலையும் இடையினையே மென்மேலும் பொன்னாக்கத்
தன்னிகர் ஏதுமில்லாத் தனிப்பெரும் பேரொளியைத்
தாங்கு தடையின்றித் தரணியெலாம் பரப்புகின்ற
நின்னுடைய எழிலிடையின் நேர்த்தியினை என்னுடைய
நெஞ்சினிலே பதித்துமே நித்தமும் நான் வணங்குகின்றேன்.

1) வேடர்குல மக்களது வேந்தனின் திருமகளாம்
வள்ளியெனும் கன்னியவள் வளமார் தனங்களிலே
ஓடிடும் நல் குங்கும ஓடையாம் சேற்றினிலே
ஒன்றியே திகழ்ந்திடும் உன்னுடைய திருமார்பு
நாடிடும் அடியவர்தம் நலிவுகளைத் துடைத்தேதான்
நலமுடன் மகிழ்வுற்று நாள்தோறும் சிவந்திடுமே
ஓடியே மறையலுற்ற ஒருபெருந் தாரகனை
ஒடுக்கிய குமரா உன் அணிமார்பைப் போற்றுகின்றேன்.

2) வேதனின் சிரமதிலே விளையாட்டாய்க் குட்டும் கை
விண்ணவர்தம் கோனையும் விரும்பியே வாழ்த்தும் கை
வேதனைகள் போக்குவதில் வேட்கை மிகக் கொண்டிருந்த
வையமெலாம் காத்து வாழ்விக்கும் தன்மையுடன்
மோதகப் பிரியனை நினைவூட்டும் மதகளிற்றை
முறைமையாய் அடக்கி மதமெலாம் போக்குகின்ற
சாதனை புரிகின்ற சரவணனே உன்னடியைச்
சரணடைந்தேன் என்னுடைய சஞ்சலங்கள் போக்கிடுவாய்!

3) சந்திரர்கள் அறுவர்தாம் சற்றேனும் குறைகளின்றிச்
சதாசர்வ காலமும் ஒளி வானப் பெருவெளியில்
சுந்தரமாம் பேரொளியாம் திருச்சுடரைப் பரப்பியென்றும்
சிறிதளவும் குறைவின்றிச் சோதிமய மாகவேதான்
எந்தெந்த வேளையிலும் இமைப்பொழுதும் ஓய்வின்றி
எங்கனும் தன்னுடைய எழிலுருவைக் காட்டிடினும்
கந்தனே! எமையெல்லாம் காத்தருளும் உன்னுடைய
கருணைத் திருமுகத்திற் கீடாமோ அவையெல்லாம்?

14) பொன்முத்து வார்த்தது போல் புன்னகையைச் சுமந்திருக்கும்
பூவிதழின் கடையோரம் பொலிவெல்லாம் குடியிருக்க
சின்னதாம் எழில்பழுத்துச் சிவந்தகனி கொவ்வையைப் போல்
செங்கனியின் வாயிதழ்கள் சிரித்தெமக்கு அழகூட்டப்
பன்னிரு விழிகளும் பறக்கின்ற வண்டுகள் தாம்
பவனி வருதல் போல் பாங்குடனே பார்த்திருக்க
உன் அழகுத் திருமுகங்கள் ஓராறும் தாமரையாய்
ஒளிர்கின்ற விந்தையினை உளங்குளிரக் காணுகின்றேன்.

15) விண்ணினும் பெரிதான வரையிலாக் கருணையினால்
விரைவுடனே வந்தெமக்கு வேண்டிய வரமருளும்
கண்கள் ஓர் ஈராறும் காதுவரை நீண்டருளும்
கடுகளவும் இடமின்றிக் கவினுறவே படர்ந்தெமது
கண்பறிக்கும் மின்னலெனக் கருணை மழை பெய்வனவாம்
கந்தனெனும் குணசீலா! கனிவுடனே மனமிரங்கிக்
கண்ணிலே நீர் சோரக் கதறியழும் எனை நீயும்
கடைவிழியால் பார்த்தருளிக் காத்தால் உனக்கென்ன குறை?

16) மறைகளெல்லாம் ஆறுமுறை மனங்கொண்டே ஓதிடவும்
மகிழ்ந்துடனே வாழ்க நீ மகனே என வாழ்த்துகிற
இறைவனின் உடலிலேயே இருந்துபின் எழுந்துவந்த
இளங்குமரா! வள்ளி கந்தா! எழில்முத்து விளையாடும்
துறையுடைய அருள் இருந்து துலங்கிடும் உன் சிரங்களிலே
தகதகவென ஒளிவீசித் திகழுமணி மகுடமுடன்
குறையெதுவும் நேராமல் காத்திடும் சிரங்களையே
கும்பிட்டு நெஞ்சினிலே குடியிருத்தி வணங்குகிறேன்!

7) இரத்தினத் தோள்வளைகள் எல்லையிலா ஒளிபரப்ப
எழில்முத்து மாலைகள் இங்கிதமாய் அசைந்தாட
வரத்தில் உயர்ந்த உன் வாகான குண்டலங்கள்
வளைந்தசைந்தே கன்னத்தில் வாஞ்சையுடன் முத்தமிடப்
புரமெரித்த ஜடாமுடியோன் பிள்ளையாய் வந்துதித்துப்
புகழ்பூத்த செந்திலோய்! பொற்கரத்தில் வேலேந்தி
மரகதப் பட்டுடுத்தி மகிழும் உன் பேரழகில்
மயங்குமென் கண்முன்னே மாமயிலோன் வருகவே!

8) அருகினில் வாராயோ அன்புடைய குமரா என்று
இருகரம் நீட்டியே ஈசன் மகிழ்ந்தழைக்க
அருள்வடிவாம் சிவகாமி அன்னையவள் மடியினின்றும்
ஆலவாய் அண்ணலின் ஆதரவுக் கரம்பற்றும்
அருள்முருகா! பரமசிவன் அணைத்தே மகிழ்கின்ற
அழகிய நன்முத்தே! இளமைகுன்றா வடிவுடனே
கருணைசெய்யும் பாலகனாம் கந்தவேளே? நின்னுடைய
கமலமலர்த் திருவடியைக் கனிவுடனே தொழுகின்றேன்!

9) 'அன்பிளைஞ! அறுமுகச் சிவக்கொழுந்தே! வாழ்வளிக்கும்
அருட்குகனே! திருக்கந்தா! ஆற்றல்மிகு படைத்தலைவா!
வென்றிடென அன்னைதந்த வெற்றிவேல் கரத்தேந்தி
விரைவுமிகு புள்ளிமயில் வாகனத்தின் மீதமர்ந்து
புன்னகைக்கும் வள்ளியெனும் பூங்கொடியாள் காதலனே!
பெருகிவரும் குறைகளெனும் பிணைதீர்க்கும் வேலவனே
தன்னிகரிலா வேலெடுத்துத் தாரகனை அழித்தவனே!
தஞ்சமெனச் சரணடைந்தேன் தயவுடனே காத்தருள்க!

10) தயவுடனே அருள்புரியும் தன்மையினைப் பெற்றவனே!
தங்கமெனும் இதயமாம் தனிக்குகையில் வாழ்பவனே!
மயங்கியே ஐம்புலனும் மாறாத சோகத்தால்
மனங்கலங்கி கபங்கக்கி மாளாத துன்புற்றுப்
பயத்துடனே வாழ்விறுதிப் பயணமெனக் குறித்தான்
பாருலகை விட்டு விட்டுப் பதற்றமுடன் புறப்படவே
முயலுகையில் என்றன் விழி முன்பாக நீ தோன்றி
மூவிரு முகங்களுடன் முன்நின்று காத்தருள்க!

11) காலனின் தூதுவராம் வான் கணங்கள் சினங்கொண்டு
கட்டு, வெட்டு என்றும் கட்டியே உருட்டு என்றும்
ஓலமிட்டே அதட்டி ஓர் ஓங்காரக் குரலெழுப்பி
உயிரினைக் கவர்ந்திடவே ஓடி வருகையிலே
கோல மயிலேறிக் குன்றுருவ வேல்தாங்கிக்
குமரா நீ என்முன்னே குதித்தோடி வந்திடுக!
'பாலனாம் எனைக்கண்டு பகையெல்லாம் தூளாகும்;
பயம்விடுக' எனக்கூறிப் பாங்குடனே அருள் செய்க!

22) பெருங்கருணை அருள் ஊற்றின் பிறப்பிடமே! கந்தனெனும் (6)
பிரபுவே! உன்னுடைய பொற்பாதம் தொழுகின்றேன்.
அருமருந்தாய் இருந்தென்னை அன்றாடம் காக்கின்ற
ஆறுமுகனே! உன்றனிரு அழகுமலர்த்தாள் பணிந்தேன்.
எருமையின் மீதமர்ந்து எமனென்னும் காலனவன்
என்னெதிரே வரும்போது ஏழையேன் நான் என்ன செய்வேன்?
தருணமதில் மயிலேறித் தயவுடனே நீ வந்து
தயக்கம் சிறிதுமின்றித் தடுத்தாண்டு காத்திடுக!

23) அண்டங்கள் அத்தனையும் அதிகாரம் மிகச் செலுத்தி
ஆண்டுவந்த சூரர்களின் ஆணவம் தனையகற்றி
மண்டியிடச் செய்தாய்! மண்ணுலகில் மன்னனாக
மாயனாம் தாரகனும் மாண்டொழியச் செய்தாய் நீ!
எண்டிசையும் புகழ்விளங்க எதிரில்லாப் பெருவீரன்
எனச்சிறந்த வேலவனே! என்னிதயக் குகையினிலே
மண்டியே கிடக்கின்ற மனக்கவலை தனைக்கொன்று
மகிழ்ச்சியினைத் தந்திடவே மால்மருகா வாராயோ?

24) துன்புடைய சுமைகளை நான் தாக்கிடவே முடியாமல்
துவள்கின்றேன்; நெஞ்சில் பெருந் துயர்மூள அழுகின்றேன்
அன்பினால் அடியாரை அரவணைத்துக் காக்கின்ற
ஆறுமுகனாம் பெருஞ்சோதி அருட்கருணைக் கடலே! ஓ!
உன்னுடைய திருவடியை ஊனுருகத் தொழுவதல்லால்
ஊமையாம் நான்வேறு ஓர்வழியும் அறிகிலேன்
நன்றியுடன் உனைத்தொழவும் நாள்தோறும் தடைபுரியும்
நெஞ்சத் துயர்நீக்கி நிம்மதியைத் தந்தருள்வாய்!

25) பன்னெடுநாள் துன்புறுத்தும் பயங்கர நோய் நொடிப் பிணிகள்
பதைக்கவாடும் குஷ்டமுடன் பாழாக்கும் காசம் மூலநோய்
என்றபல பிணிகளுடன் என்றுமே தணியாத
ஈளையுடன் குன்மம், சுரம், ஏலாத நினைவின்மை
தின்றுவிடத் துடிக்கின்ற திறமுடைய பேய்களெல்லாம்
திருக்குமரா! உன்றன் அருள் திருநீறு பதித்திருக்கும்
பன்னீரின் இலைகளைப் பார்த்த மறுகணமே
பறந்து மறைந்தொழியுமே; பாங்கான உண்மையிது;

26) கண் இரண்டும் என்றென்றும் கந்தன் எழில் காணட்டும்!
கதிர்வேலன் திருப்புகழைக் காதிரண்டும் கேட்கட்டும்!
திண்ணமுடன் வாய் அவனைத் தித்திக்கப் பாடட்டும்
திருவடியை எனதிரு தளிர்க்கரங்கள் பற்றட்டும்
என்தன் உடலும் இனியவனாம் இறைவனுக்கு
என்றென்றும் குற்றேவல் இனிதே செய்யட்டும்
கண்ணுக்குள் இமையாம் குகனுடனே என்றன்
கருவிகளாம் ஐம்புலன்கள் கலந்தே மகிழட்டும்!

27) முனிவர்கட்கும் அடியார்க்கும் முயன்று வரங் கேட்கின்ற
மனிதர்கட்கும் வரங்கொடுத்து மகிழ்ச்சியைத் தருவதற்கும்
கனிவுடனே முன்வந்து காட்சியினைத் தந்தருளும்
கடவுளர் பலரிந்தக் காசினியில் உண்டெனினும்
மனிதன் எனச் சொல்லிடவும் மனங்கூசும் ஈனமிக்க
மாமனிதனைப் பிறவிக்கும் மனம்போல வரமளிப்போன்
கனிவான வடிவுடைய திருக்கந்தக் கடவுளன்றி
காசினியில் வேறொரு கருணையுருக் கண்டிலனே.

28) சுந்தர மனைவி மக்கள், சுற்றமொடு பால் பசுவும்
சொந்தம் எனக் கூறியே சூழ்ந்திருக்கும் உறவினர்கள்
எந்த ஒரு குடும்பத்தில் இருப்போர்கள் யாவருமே
எவ்வித நினைவுகளும் இதயத்தில் படராமல்
உந்தனருள் திருவடியை உளமாரப் பற்றிவிடல்
உண்மையுடன் துதிக்கின்ற உள்ளத்தைத் தருவாய் நீ!
செந்தில் வாழ்ஞாம் குமரா சீர்சேவற் கொடியோனே!
சீலனாம் உனையன்றிச் சிறந்ததுணை எனக்குண்டோ?

29) புலியோடு நரியோடு போத்தொடு நாயெனும்
புன்மைமிகு குணங்களைப் போலவே என்னுடைய
வலியதாம் உடலினிலே வந்துதித்துத் தோன்றியே
வருத்துகிற நோயினை வாட்டிடும் வேளையிலே
நலிவெலாம் நீக்குகிற நாயகா நீ வந்து
நல்வேலால் விரட்டியே நாசமுறப் போக்கிடுவாய்.
கிலிகொளவே வைத்திட்ட கிரௌஞ்ச மலைபிளந்த
சூர்வேலா! பேரழகா! குமரனே! வருகவே நீ!

30) பெற்றெடுத்த மக்கள் தாம் பெருந்தவறு செய்திடினும்
பிழைபொறுத்து மன்னிப்பர் பெரியவர்கள்; அதுபோல
உற்றதோர் தேவர்களின் உன்னதத் தலைவனென்
ஒப்பிலாச் சக்திபெற்ற உயர்சேனாபதியே! என்
நற்றவங்கள் பலவற்றின் நாயகனாய் வந்தவனே
நாயேனின் மனம்போல நாள்தோறும் புரிகின்ற
குற்றங்கள் மனத்தினிலே கொள்ளாமல் அடியேனைக்
குணமுடனே அரவணைத்துக் குறைவின்றிக் காத்தருள்க!

31) இன்மை நிறை காட்சிதரும் எழில்மயிலை வணங்குகிறேன்!
ஏறி நீ ஊர்ந்துவந்த ஆட்டினையும் ,,
தனிப்பெரும் சோதிதவழ் 'தனி வேலை ,,
தனிர்கோழிக் கொடியினையும் தலைதாழ்த்தி ,,
இனிதாகக் கடலலைகள் எழுந்தெழுந்து தவழ்ந்துவரும்
இணையில்லா வெற்றிநகர் என்றதிருச் செந்தூரில்
புனிதத்திருக் கோலத்தைப் பூண்டுறையும் சண்முகனின்
பொன்னடியைத் தலைதாழ்த்தி போற்றியே வணங்குகிறேன்

32) ஆனந்த மூர்த்தியாம் ஆறுமுகன் வாழியவே!
அளவிலாக் கீர்த்திமிக்க அரன்மகன் ,,
வானவரும் போற்றுகின்ற வடிவேலன் ,,
வையமெலாம் காக்கின்ற வள்ளிமணாளன் ,,
தீனர்களுக்கு அருள்கின்ற திருமுருகன் ,,
தீதிலாமுக்தி நல்கும் தேவானைமணாளன் ,,
மோனத் தவமியற்றும் முப்புரம் எரித்தோன் மைந்தன்
முத்தமிழ்த் தெய்வமாம் முருகனென்றும் வாழியவே!

---